## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 107/2010**

திருமதி. புஷ்பவதி (P.W –1) **12.08.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு **10** முதல் **13** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா எதற்காக தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளேன். வழக்கு சொத்துக்கள் மற்றும் பிரதிவாதிகள் தாவாவில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை விவரங்கள் தெரியும் என்றால் சரி. தாவா சொத்துக்கள் முதலில் கொண்டாக்கவுண்டருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றால் தவறு. கொண்டாக்கவுண்டருக்கும் அவருடைய மகன்களுக்கும் பாத்தியப்பட்டது. கொண்டாக்கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஐந்து மகன்கள். இரண்டு பெண் மக்கள் அவருக்கு உள்ளார்கள் என்றால் ஆமாம். இரண்டு பெண் மக்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

2. இரண்டு பெண் மக்களும் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. இறந்து போய்விட்டார்கள் இறந்து போன இரண்டு பெண் மக்களுக்கு வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரி. அந்த வாரிசுகள் பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியாது. வா.சா.ஆ–1 ஆவணத்தின் படி தாவா சொத்துக்கள் என்னுடைய குடும்ப சொத்துக்கள் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ–1 தாவா சொத்து கொண்டாக்கவுண்டர் மற்றும் அவருடைய ஐந்து மகன்களுக்கு பொதுவில் பாத்தியம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எல்லோருக்கும் பாத்தியப்பட்டது. வா.சா.ஆ–1

சொத்திற்கு மூல ஆவணம் 28.5.1958 ம் தேதி மறு கிரைய உடன்படிக்கை ஒப்பந்த ஆவணம் என்றால் எனக்கு தெரியாது.

3. அந்த ஆவணத்தின் படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஆறு நபர்களுக்கு 63 ஏக்கரில் 12 இல் ஓர் பங்கு பொதுவாக பாத்தியப்பட்டது என்றால் சரி. தாவா சொத்து விவரத்தில் காசா எண்.139 புஞ்சை ஏக்கர் 3.34 ல் 12/1 பங்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் 12/1 பங்கு தான் பாத்தியம். மீதமுள்ள பங்கு யாருக்கு பாத்தியப்பட்டது என்பதை தாவா வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. அவர்களை தாவாவில் தரப்பினர்களாகவும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய தாத்தா கொண்டப்பன் 10 முதல் 12 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ–2 ன் படி சொத்துக்களை கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரி. இந்த சொத்துக்கள் கிரையப்படியும் பாகப்பிரிவினை படியும் என்னுடைய பாட்டனார் பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. அது பொதுவாக பாத்தியப்பட்ட சொத்து.

4. வா.சா.ஆ –2 ன் படி அந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு சுவாதீனம் கொடுக்கப்பட்டதாக சரத்துக்கள் உள்ளது என்றால் தவறு, சுவாதீனம் என்னுடைய அப்பாவிடம் உள்ளது. வா.சா.ஆ –2 ன் படி எனது குமாரத்தி திருமண செலவுக்காகவும் ஏற்கனவே ரொக்கமாக பெற்றுக்கொண்ட தொகையின் படி கிரையம் செய்து கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆவணத்தில் அப்படி சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் அப்படி எழுதி கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ –2 ஆவணம் ஏற்பட்டது எனக்கு தெரியும் என்றால் சரி. அந்த சமயத்தில் எனக்கு சிறிய வயது. என்னுடைய தகப்பனார் அ.வ.எண்.153/1970 என்று 1970 ஆம் வருடம் தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி.

5. என்னுடைய தகப்பனார் ஏற்கனவே 1970 ஆம் வருடம் ஏற்படுத்திய வழக்கு மூலத்தின் அடிப்படையில் இந்த தாவாவையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா தாக்கல் செய்த வழக்கு 1972 ல் தீர்ப்பு ஏற்பட்டது. மீண்டும் அவர்கள் தகராறு செய்ததால் என்னுடைய அப்பா இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தாவா சொத்தில் வந்து தகராறு செய்துள்ளார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் அப்பா தாக்கல் செய்திருப்பார். தாவா வழக்குரையில் என்னுடைய தகப்பனார் வாதி தனிப்பட்ட முறையில் அனுபவம் சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளார் என்று சொல்லி உள்ளார் என்றால் சரி, அப்பா தான் சுவாதினத்தில் உள்ளார். அப்பா சுவாதீனத்தில் உள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6. வா.சா.ஆ –10 ன் படி தாவா நிலுவையில் இருக்கும் போது அதை மறைத்து என்னுடைய அப்பா பட்டாவை பெற்றுள்ளார் என்றால் தவறு. எதையும் மறைக்கவில்லை. பட்டா பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் தாவா தாக்கல் செய்து நிலுவையில் இருந்து சமயத்தில் வா.சா.ஆ–11 ஏற்பட்டுள்ளதால் அது செல்லாது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–11 ன் படி பொய்யான உத்தரவை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தாவா சொத்திற்குரிய பட்டா என்னுடைய தகப்பனார் பேரில் மாற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ–11 பொய்யாக ஏற்பட்டுள்ளதால் அதன் அடிப்படையில் ஏற்பட்ட வா.சா.ஆ–12 செல்லாது, பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

7. முதல் விசாரணை வாக்குமூலத்தின் 2 வது பக்கத்தில் பி பட்டியலிட்ட சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வளவு சொத்து என்னுடைய தகப்பனார்

எவ்வளவு சொத்து என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 0.41 செண்ட் தகப்பனாருக்கு பாத்தியம் என்று சொல்லி உள்ளேன். பி பட்டியலிட்ட சொத்தில் 0.41 செண்ட் நிலம் ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பாக தாவாவில் சொல்லவில்லை என்றால் தவறு. தாவா சொத்து பாகப்பிரிவினைக்காக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் தவறு. கோரப்பட்டுள்ளது அவ்வாறு கோரவில்லை, தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு தாவாவில் கொண்டாக்கவுண்டரின் பெண் மக்களை தரப்பினர்களாக சேர்த்து உள்ளீர்களா என்றால் இல்லை.

8. பெண் மக்களுக்கு அந்த சமயத்திலே சீர் வரிசைகள் செய்யப்பட்டு விட்டது. முதல் பட்டியலிட்ட சொத்து பொறுத்து சுவாதீனம் எடுக்கப்பட்டு என் பெயரில் தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். செட்டில் மெண்ட் விவரங்கள் தாவாவில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். தாவா சொத்தில் உரிமை உள்ள கலாமணியை தாவாவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. அவருக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை. வா.சா.ஆ– 5 ன் படி பி பட்டியலிட்ட சொத்தை பொறுத்து தனிப்பட்ட முறையில் பரிகாரம் தேடிக் கொள்ளும்படி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

9. வா.சா.ஆ–5 ல் சொல்லப்பட்டுள்ள தரப்பினர்களுக்கு அதில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ– 5 ன் படி தான் என்னுடைய தகப்பனார் தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவாவில் கூறிப்பிட்டுள்ளவாறு 18 பிரதிவாதிகளையும் தரப்பினராகளாக சேர்க்கவில்லை என்றால் சரி. தாவாவில் தவறாக பரிகாரம்

கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.என்னுடைய தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10. கந்தசாமி மற்றும் ரங்கசாமி வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இறந்து போவர்களின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்திற்கு 1969 ல் இருந்து வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது . 1969 ம் வருடம் தங்கமுத்து வகையறா பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் 1970 ம் வருடமே அப்பா பரிகாரம் கோரியுள்ளார். அவ்வாறு பரிகாரம் கோரப்பட்டுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 1970 ம் வருடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. 1969 ம் வருடத்தில் இருந்து வழக்கு தாக்கல் செய்ய தவறியுள்ளதால் 10 முதல் 13 பிரதிவாதிகளின் உரிமையை தடுக்கமுடியாது என்றால் சரியல்ல. 0.41 செண்ட் நிலத்தில் தங்கமுத்து வகையறா சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் தவறு. நாங்கள் உள்ளோம். வா.சா.ஆ –1 மற்றும் 2 ஆவணங்களுக்குரிய மூல ஆவணங்களான 1946 மற்றும் 1966 ஆவணங்களை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த பாத்தியமும் இல்லை. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் 10,11,13 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை விவரங்களை பொறுத்து வாதுரைக்கவில்லை என்றால் சரியல்ல.

12 பிரதிவாதி ஆஜர் இல்லை. எந்த முறையீடும் இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.08.12 17:40:56 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.